1 கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

O.S.No. 155 /2025

2025 வது ஆண்டு அக்டோபர் மாதம் 24–ம் நாள் வா.சா.1 ன் சாட்சிய வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 வது விதியின் 9 வது (பிரிவின் ஏற்பாட்டின் படி) உதவியாளரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது/பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சுடலையாண்டி (எ) முருகேசன் | கிராமம் | |
| த.பெ | திரு.சிவனுபாண்டி | வட்டம் | சங்கன்திரடு |
| வயது | 71 | மதம் | |

24.10.2025 முதல் விசாரணை

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். இந்த வழக்கு விபரங்கள் எனக்கு தெரியும். எனது முதல் விசாரணையை நிரூபண வாக்கு மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி தயார் செய்யப்பட்டவை தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 15.04.1996 தேதியிட்ட வாதி பெயரில் உள்ள பயிரிடும் பாத்தியதை விடுதலை தஸ்தாவேஜ் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி பெயரில் உள்ள கோயிலுக்கு செலுத்திய இரசீது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண் 103/2009 பிறப்பித்த தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் வழக்கு எண் 103/2009 பிறப்பித்த தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல்முறையீட்டு எண் 98/2014 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேல்முறையீட்டு எண் 98/2014 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை நீதிமன்ற சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 24.01.2022 தேதியிட்ட வாதிக்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சாகுபடி அடங்கல் அசல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.03.2025 தேதியிட்ட வாதிக்கு கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சாகுபடி அடங்கல் அசல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு

செய்யப்படுகிறது. 18.03.2025 தேதியிட்ட புகார் மனு இரசீது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக 28.10.2025 அன்று ஒத்திவைக்கப்படுகிறது.)